திரு. எம். ஏ. லத்திப்: இந்த மாதிரியான பிரச்சினையில் பரிகாரம் கொடுக்கும் வகையில் அரசு தீர்க்கும்போது நம்முடைய தமிழகத்தின் ஒட்டுமொத்தமான நன்மைகளை, மக்களின் நன்மைகளை உத்தேசித்து அதன் விளைவுகளுக்கேற்ப முடிவுகளை எடுக்க வேண்டுமென்றும், எல்லோருக்கும், நிவாரணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோர் கருத்தும் ஒன்று தான். ஒரு கட்சித் தலைவர் எழுந்து சொன்னால் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சொல்ல வேண்டுமென்றில்லை. திரு. பெரியசாமி, நீங்களும் சொல்லுங்கள்.

திரு. டி. பி. மு. பெரியசாமி: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புக் கொடுக்கும்போது கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் எண்ணக் குமுறல்கள் எரிமலையாக வெடிப்பதாக அமைந்து விடாமல் அந்த எண்ணக் குமுறல்களை அடக்க ஏதுவாக அவர்களுடைய அறிவிப்பு அமைய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(7) அறிவிப்பு

ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்கைச் சார்ந்த பாராளுமன்றக் குழு பேரவைக்கு வருகை தந்திருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்கைச் சார்ந்த பாராளுமன்றக் குழு அந்நாட்டுப் பேரவைத் தலைவர் தலைமையில் வந்திருக்கிறார்கள். இப்பேரவையின் சார்பாக நான் அவர்களை வரவேற்கிறேன். இப்போது அவர்கள் பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரவாரம்.

I have to make an important announcement:

A Parliamentary Delegation from the German Democratic Republic, led by the Speaker, is now watching the Proceedings of this House from the Speaker's Gallery. On behalf of this House and myself I extend a warm welcome to them. (cheers)